[1981 பிப்ரவரி 7]

தன்னிறைவுத் திட்டம்.

*குறுகிய கால வினா எண். 5—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு எவ்வளவு ஒன்றியங்கள் தன்னிறைவு திட்டத்தின்கீழ் எடுக்கப்பட இருக்கின்றன ?

(ஆ) அதற்கு எத்தனை கோடி ரூபாய் ஒதுக்க அரசு உத்தேசித்துள்ளது ?

(இ) ஏற்கனவே எடுக்கப்பட்ட 69 ஒன்றியங்களில் வேலை முடிந்து விட்டதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 120 ஒன்றியங்கள்.

(ஆ) நிதி ஒதுக்கீடு இன்னும் செய்ய வில்லை.

(இ) வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன. இது முழுவதும் முடியும்போது எத்தனை கிராமங்கள் பயன்பெறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கிராமங்களிலே முக்கியமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பெறுகின்றன. குறிப்பாக குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள் வசதி, அரிசன குடியிருப்புகளுக்கு—மயானங்களுக்குச் செல்ல வேண்டிய பாதைகள் அமைத்தல், சிறு பாலங்கள், சிறு பாசன வசதி, ஊரக மருத்துவ மனைகள், மக்கட்பேறு நிலையங்கள் அரிசனங்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற வேறு சில பணிகளுக்காகவும் இத் தன்னிறைவுத் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. இதன் மூலமாக 40 ஆயிரம் கிராமங்கள் பலன் அடையும் என்றும் எதிர்பார்க்கப்பெறுகிறது.

திரு. மி. வின்சென்ட்: புதிதாக எடுக்கப்பெறும் 120 ஒன்றியங்களில் குமரி மாவட்டத்தில் உள்ள தக்கலை, தோவாளை ஒன்றியங்கள் சேர்க்கப்பெற்றுள்ளனவா என்று அறியவிரும்புகிறேன் ?

[1981 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு ஒன்றியங்கள் எடுக்கப் பெற்றிருக்கின்றன. மேற்புறம், தக்கலை, திருவட்டாறு, தோவாளை ஆகியவையாகும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த தன்னிறைவுத் திட்டத் தின்கீழ் எத்தனை இடங்கள் எடுக்கப்பெற்றிருக்கின்றன? எவையெவை? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எல்லா மாவட்டங் களிலிருந்தும் ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொருவரும் கேட்க ஆரம்பித்தால் அதற்கே $\frac{1}{2}$ மணி நேரம் போய்விடும். ஆகவே அவற்றிற்கான குறிப்புகளை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு உறுப்பின ருக்கும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் அதிக மாகும். ஆகையினால் அமைச்சர் அவைகளை அச்சடித்து அனுப்பிவிடுவார்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. ஒழுங்குப் பிரச்சினைகள்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மதுரை மாவட் டத்திலே திருமங்கலம் வட்டம், உசிலம்பட்டி வட்டம் ஆகிய இடங்களிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் கடும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மழை பொய்த்ததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையினால் அதை வறட்சிப் பிரதேசமாக அறிவித்து, வறட்சிப் பணிகளை மேற் கொள்வதுகுறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத் திருந்தேன்....(மணியடிக்கப் பெற்றது).

TRUTH ALONE TRIUMPHS